ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2508/28 - 2026 ඔක්තෝබර් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.10.01

2508/28 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**நிதியமைச்சருக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கை**

**2026, ஒற்றோபர் 01**

2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் “மத்திய வங்கிச் சட்டமெனக்” குறிப்பிடப்படும்) 26 ஆம் பிரிவினை நிறைவேற்றும் விதத்தில் இரண்டாயிரத்து இருபத்து ஆறு (2026) ஒற்றோபர் மாதம் 01 ஆம் நாளன்று நிதியமைச்சரும் இலங்கை மத்திய வங்கியும் இந்நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் ஈடுபடுகின்றனர்.

தற்போது இத்தால் இது ஒப்புக்கொள்ளப்பட்டு பின்வருமாறு பிரகடனப்படுத்தப்படுகின்றது,

1. சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இவ்வுடன்படிக்கையில்,

   (அ) “கொ. நு. வி. சு. ” என்பது இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினைக் குறிக்கின்றது.

   (ஆ) “காலாண்டு முதன்மைப் பணவீக்க வீதமானது” தொடர்புபட்ட நாட்காட்டிசார் காலாண்டின் மூன்று மாதங்களுக்கான மாதாந்த கொ. நு. வி. சு. இன் ஆண்டிற்காண்டு சதவீத மாற்றங்களின் சாதாரண சராசரியைக் குறிக்கின்றது.

2. பணவீக்க இலக்கு பின்வருமாறு காணப்படும்,

   இலங்கை மத்திய வங்கியானது காலாண்டு முதன்மைப் பணவீக்க வீதத்தினை 5 சதவீத இலக்கில் பேணுவதனை செயல்நோக்காகக் கொள்ள வேண்டும். மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5) ஆம் பிரிவின் நோக்கத்திற்காக இடைவெளியானது ± 2 சதவீதப் புள்ளிகளாகக் காணப்படும்.

இந்த உடன்படிக்கையானது இந்த உடன்படிக்கையின் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி
அமைச்சர் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் சனாதிபதி.

**முனைவர் பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளும் சபையினதும்
நாணயக் கொள்கைச் சபையினதும்
தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.

EOG 10 - 0004